**மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**ந.க.எண்.36/ஒபக/2020, நாள் :04.01.2020**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (இடைநிலை) – பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு (SMDC) உறுப்பினர்களுக்கான மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான இணையதள வழியாக பயிற்சி (Online Training) வழங்குதல் – சார்பு

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், சென்னை–6 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.614 / C7 / SMDC / SS / 2020, நாள் : 21.12.2020.

--------

பார்வையில் கண்டுள்ள ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (இடைநிலை) யின் கீழ் 2020–21ம் கல்வியாண்டிற்கான பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு (SMDC) உறுப்பினர்களுக்கான மேலாண்மைத் திறன் வளர்த்தல் மற்றும் விழிப்புணர்வு சார்ந்த பயிற்சி கோவிட்–19 சூழலில் இணையதள வழியாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**பயிற்சியின் நோக்கங்கள்:**

- அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009
- குழந்தையின் உரிமைகள் (Child Rights)
- பாலினப் பாகுபாடு
- பேரிடர் மேலாண்மை
- தரமான கல்வி
- கற்றல் விளைவுகள்
- உள்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள்
- பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு (SMDC) உறுப்பினர்களின் பணிகள், நிதி பயன்பாடு சார்ந்த வழிகாட்டுதல்
- சமூக தணிக்கை (Social Audit Questionnaire) பள்ளி மேம்பாட்டுத் திட்டம் (School Development Plan) தயாரித்தல்
- தூய்மைப் பள்ளி மற்றும் நடத்தை மற்றும் & கற்றலின் புதுமைகள்
- கோவிட்–19 சார்ந்த விழிப்புணர்வு/தற்காத்தல்

இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன்படி (RTE Act) அனைத்து வகை அரசு உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் (SMDC) கட்டாயமாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டில், அனைத்து பள்ளிகளிலும் (உயர்நிலை மற்றும் மேல்நிலை வரை) பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு (SMC /SMDC) உறுப்பினர்களுக்கான மாவட்ட மற்றும் பள்ளி அளவிலான பயிற்சி (Online Training) நடத்தப்பட வேண்டும். மாவட்ட/பள்ளி அளவில் இணையதள வழியாக (DIKSHA) மூலமாக கீழ்க்காணும் செயல்திட்டம் மற்றும் வழிகாட்டுதல்களின்படி பயிற்சிகளை நடத்தப்பட வேண்டும்.

**செயல்திட்டம்:**

| S.No | Activities | Participants | Time Line | Responsibility |
|---|---|---|---|---|
| 1 | School Level Online Training | SMDC Members (05 Members) | 05.01.2021 to 07.01.2021 | Respective Headmasters and One teacher from the school |

**பயிற்சிக்கான வழிகாட்டுதல்கள்:-**

**தொழில்நுட்பம் சார்ந்து கடைபிடிக்க வேண்டியவை:**

- தலைமையாசிரியர்கள்/ஆசிரியர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நாள் முதல் DIKSHA – இல், அதாவது https://diksha.gov.in/tn/explore-course?selectedTab=course என்ற இணையதள முகவரியில் சென்று இந்த பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். (Recommended browser - Google Chrome).
- தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்கள் EMIS login Id and password மூலம் மட்டுமே உள்ளீடு செய்து பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.
- அதன்பிறகு Course என்ற Menu – இல் உள்ள search bar-ல் SMDC என search செய்து பயிற்சியினை தொடங்க வேண்டும்.
- இந்த பயிற்சியை DIKSHA APP மற்றும் DIKSHA இணையதளம் (diksha.gov.in/tn) ஆகிய இரு வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் மேற்கொள்ளலாம்.
- பயிற்சியின் போது விழிப்புணர்வு Video, பயிற்சியாளர்களுக்கான assessment tool (Quiz) போன்றவையும் இடம்பெறும்.
- பயிற்சியில் கலந்து கொண்ட பயிற்சியாளர்களின் விவரங்கள் மாநிலத்திலிருந்து EMIS Portal வழியாக கண்காணிக்கப்படும்.
- பயிற்சியின் தாக்கம் SMDC உறுப்பினர்களை சென்று சேர்ந்ததை உறுதிப்படுத்த உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டங்களை தலைமையாசிரியர் பொறுப்பில் பராமரித்தல் வேண்டும்.

Scanned with CamScanner

- தலைமையாசிரியர்கள் பயிற்சி சார்ந்த புகைப்படம், காணொளிகளுடன் கூடிய தொகுப்பறிக்கையினையும், பயிற்சியில் பங்குபெற்ற SMDC உறுப்பினர்களின் எண்ணிக்கையினையும் EMIS Portal –ல் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

**(ii) தலைமையாசிரியர்களின் பணிகள்:**

- SMDC உறுப்பினர்களுக்கு ஒரு நாள் இணையதளவழி (Online) பயிற்சியினை அந்தந்த பள்ளி அளவில் வழங்குதல் வேண்டும்.
- இப்பயிற்சியில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களைக் கலந்து கொள்ள வைப்பது சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.
- பயிற்சிக்குத் தேவையான Laptop, Mobile, LCD Projector மற்றும் இதர மின்சார உபகரணங்கள் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.
- பங்கேற்பாளர்களின் வருகையை புகைப்படத்துடன் கூடிய ஒரு பதிவேடாக பராமரிக்க வேண்டும்.
- அனைத்து செலவினங்களும் உரிய பற்றுச்சீட்டுடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும். அவற்றை EMIS Portal –ல் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
- பள்ளி மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்குழு (SMDC) உறுப்பினர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முடிவுற்ற பின்னர், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசனை செய்து 2021–22 ஆம் ஆண்டு முதல் 2023–24 ஆம் ஆண்டு வரை (3 ஆண்டிற்கான) பள்ளிக்கான **பள்ளி மேம்பாட்டுத் திட்டம்** (School Development Plan-SDP) கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு தயார் செய்திடல் வேண்டும்:–

1. பள்ளி வயது மாணவர்கள் அனைவரையும் பள்ளியில் சேர்த்து அவர்களின் தொடர்ச்சியான வருகையை உறுதி செய்தல்.
2. மாற்றுத் திறனுடைய குழந்தையைக் கண்டறிந்து அவர்கள் கல்வி கற்கத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.
3. அரசு, உள்ளாட்சி அமைப்பு மற்றும் வேறு அமைப்புகளிலிருந்து கிடைக்கும் நிதி ஒதுக்கீடுகள் முறையாகப் பயன்படுத்துவதை கண்காணித்தல்.
4. மாணவர்களின் கற்றல் திறனைக் கூர்ந்து கவனித்தல்.
5. பள்ளியின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்.
6. பள்ளியில் மதிய உணவுத் திட்டம் முறையாகச் செயல்படுவதை உறுதி செய்தல்.

**<u>பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில் இருக்க வேண்டியவை:</u>**

1. ஒவ்வொரு ஆண்டிற்கான வகுப்பு வாரியான பள்ளிச் சேர்க்கை பற்றிய திட்டம்.
2. தலைமையாசிரியர் 1 முதல் 12 வகுப்பு பாட ஆசிரியர்கள், பகுதி நேர ஆசிரியர்கள் மற்றும் தேவைப்படும் கூடுதல் ஆசிரியர்கள் பெயர்ப் பட்டியல்.
3. மாணவர்களின் அடைவுத் திறன் மற்றும் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான குறைதீர் கற்றலுக்கான செயல் திட்டம்.
4. ஒரு பள்ளியில் இருக்க வேண்டிய நடைமுறைகளை தரங்களின் படி அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு தேவையான திட்டங்கள் வாயிலாக (Long term Plan) கூடுதல் கட்டடங்கள், உபகரணங்கள் ஆகியவற்றின் விவரங்கள்.
5. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டு வாரியாக பள்ளிச் சேர்க்கை பற்றிய திட்டம், தேவைப்படும் ஆசிரியர், பள்ளித் தேவைகள், சிறப்புப் பயிற்சிகள், குழந்தைகளுக்கான இலவச பாடப் புத்தகங்கள், சீருடை உள்ளிட்ட அம்சங்களுக்கு தேவையான நிதியை திட்டமிடல்.
6. தற்போது இருக்கின்ற உள் கட்டுமான வசதிகள், கட்டடங்கள், ஆய்வகம், நூலகம், கழிப்பறைகள், குடிநீர், விளையாட்டு மைதானம் மற்றும் இருக்கைகள் உள்ளிட்ட ஏனைய வசதிகளுக்குத் தேவைப்படும் நிதி குறித்த திட்டமிடல்.

மேற்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றி பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் ஐந்து பேர் (Online Training) பயிற்சியில் தவறாமல் கலந்து கொள்ள செய்து அதன் அறிக்கையை EMIS Portal – ல் பதிவு செய்து விவரத்தினை **08.01.2021 அன்று மாலை 5 மணிக்குள் மாவட்ட திட்ட அலுவலகம், காந்தி நகர், காட்பாடி அலுவலகத்தில் தனிநபர் மூலம் சமர்ப்பிக்குமாறு** அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி, தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

5.1.21

மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்(ஒபக)
மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர் –6.

பெறுநர்:–
அனைத்து அரசு உயர் / மேல்நிலைப்பள்ளி, தலைமையாசிரியர்கள்
நகல்:–

1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், இராணிப்பேட்டை, திருப்பத்தூர்
2. மாவட்ட கல்வி அலுவலர்கள், அரக்கோணம், இராணிப்பேட்டை, வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர்
3. அலுவலகக் கோப்பு.

Scanned with CamScanner